**தலைப்பு 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பாரயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய இலக்கம் 03/2022 ஆம் என்ற தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டில் செலவினங்களை செய்வதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் சேமிப்பு இருக்குமாயின் வழமையாக மேற்கொள்ளப்படுகின்ற பிரகாரம் அவை ஆண்டு முடிவடைவதற்கு முன் ஏனைய செலவின விடயங்களுக்காக ஈடுபடுத்த முடியாதிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த | நாட்டில் மோசமான பொருளாதார நெருக்கடி எழுந்திருந்தமையால், பணவீக்கம் 50 சதவீதம் அளவில் உயர் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அதனால் 2021 ஆண்டின் மதிப்பீடு தயாரிக்கும் போது காணப்பட்ட விலைகளின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்வடைந்து சென்றதன் காரணமாக, 2022 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு போதியளவில் காணப்படவில்லை. அதனால் ஆண்டில் செலவினங்களை செய்வதற்காக செலவின | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், 13 செலவின விடயங்களுக்குரிய மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதியளவு இல்லாமையின் காரணமாக கூட்டுமொத்தமாக ரூபா 7,451,000 தொகை அதாவது 0.42 சதவீதம் முதல் 440 சதவீதம் வரையிலான வீச்சில் நிதிப்பிரமாணம் 66/69 இன் கீழ் நிதி ஏற்பாடு அதிகரிக்கப்பட்டிருந்தது. | விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் செலவினங்களில் ஆகக் குறைந்த செலவின விடயங்களில் சேமிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ஆண்டின் இறுதிக்கு முன்னர் நிதிப்பிரமாணம் 66 இல் மாற்றல்கள் செய்யப்பட்டு திணைக்களத்தின் பணிகளை தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்காக உரிய செலவின விடயங்கள் மாற்றப்பட்டிருந்தது. | |
| (ஆ) | செலவின விடய இலக்கம் 239-1-1-1505 (மானியங்கள் மற்றும் பங்களிப்புப் பணம்) மதிப்பீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு ரூபா 174,000,000 ஆக இருந்ததுடன் மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டதன் காரணமாக 44.5 சதவீத அளவு அதாவது ரூபா 7,451,000 தொகை ஏனைய செலவின விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | பங்களிப்புப் பணம் செலுத்துதல் பிரதி திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் நிதிஏற்பாடு கோரப்பட்டிருந்ததுடன் நாட்டில் காணப்பட்ட அந்நிய செலாவணி அளவு காணப்படாமையினால் பங்களிப்புப் பணம் செலுத்துதல் வரையறுக்கப்பட்டதன் காரணமாக அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அத்தியாவசிய செலவினங்களை தீர்ப்பதற்காக வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் நிதியமைச்சின் அங்கீகாரத்தின் கீழ் சேமிக்கப்பட்ட நிதியேற்பாடு திணைக்களத்தின் பணிகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்காக மாற்றப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு சரியாகவும் இலக்குகளுடனும் தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 11 மீண்டெழும் செலவின விடயங்களில் மிகை ஏற்பாடு ஒதுக்கப்பட்டதன் காரணமாக ஆண்டில் பயன்படுத்தப்பட்டதன் பின்னர் ரூபா 103,809,754 சேமிப்பு காணப்பட்டதுடன் அது தேறிய நிதியேற்பாட்டில் 14 சதவீதம் முதல் 92 சதவீதத்திற்கு இடையிலான வீச்சிலான சதவீதத்தை கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | வெளிநாட்டு பிரயாணச் செலவினங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை, நாட்டில் காணப்பட்ட எரிபொருள் பற்றாக்குறையின் காரணமாக கடமை பிரயாணங்கள் வரையறுக்கப்பட்டமை, வாகன பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை, நடாத்தப்படுகின்ற கூட்டங்கள் Zoom தொழில்நுட்பம் ஊடாக நடாத்தப்பட்டமையினால் உபசரிப்புக்களுக்கான செலவினங்கள் வரையறுக்கப்பட்டமை மற்றும் பொருட்களின் விலைகள் உயர்வடைந்து சென்றதன் காரணமாக சிறிய பராமரிப்பு நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டமை, நாட்டில் காணப்பட்ட அந்நிய செலாவணி போதியளவு இல்லாமையினால் பங்களிப்பு பணம் செலுத்துதல் வரையறுக்கப்பட்டமை, பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான ஆதனக்கடன் செலுத்துதல் நிறுத்தப்பட்டமை, உரிய உறுதிச் சீட்டுக்கள் உரிய நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படாமை, நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் வரையறுக்கப்பட்டமை, மற்றும் இறக்குமதி வரையறுக்கப்பட்டமை, எரிபொருள் வழங்குதல் வரையறுக்கப்பட்டதன் காரணமாக வாகன பயன்பாடு குறைவடைந்தமை போன்றவற்றின் காரணமாக நிதியேற்பாட்டின் சேமிப்பிற்காக தாக்கமளித்திருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவின மதிப்பீடு சரியாகவும் இலக்குகளுடனும் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆகஸ்ட் 11 ஆந் திகதி மரணமடைந்த உத்தியோகத்தரிடமிருந்தும், 2021 யூலை 20 ஆந் திகதி சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தரிடமிருந்தும், அறவிட வேண்டிய ரூபா 428,726 கூட்டுத்தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் தவறியிருந்தது. | மரண பணிக்கொடையில் உரிமைத்தன்மை தொடர்பாக தீர்மானத்திற்கு வந்ததன் பின்னர் உரிய மரண பணிக்கொடை செலுத்துவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தமையும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றதன் பின்னர் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய கடன் மீதியை பதிவழிப்பதற்கான இயலுமை காணப்படுகின்றமையும் ஓய்வூதிய திணைக்களத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>2021.07.20 ஆந் திகதி வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிடவேண்டிய இடர் கடன் நிலுவை மீதியை தீர்த்து வைக்குமாறு உத்தியோகத்தருக்கு 2023.03.16 ஆந் திகதிய மீள்நினைவூட்டல் கடிதம் மூலம் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்து நிலுவை கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் குறிப்பு இலக்கம் (iii) எந்தவொரு பொறுப்பொன்றும் காண்பிக்கப்படாதிருந்த போதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2023 சனவரி மற்றும் பெப்ரவரி | 2022.12.31 இல் உள்ளவாறு உரிய செலுத்த வேண்டிய கையிலுள்ள பட்டியல்கள் தவறவிடப்பட்டமையால் குறிப்பிடப்படாதிருந்ததுடன் அது பொறுப்பு பதிவேட்டில் | எதிர்வரும் ஆண்டின் போது தீர்த்து வைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த பொறுப்புக்களை |

| | | |
|---|---|---|
| உறுதிச்சீட்டுக்களை பரிசோதனை செய்த போது மீளாய்வாண்டிற்குரிய ரூபா 468,221 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்டுள்ளது. | சரியாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

**2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் (3)(x) பந்தியின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் கீழ் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் வசதிகள் 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் கைவிட வேண்டியிருந்த போதிலும், சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் திணைக்களத்தால் பதவி நிலை உத்தியோகத்தருக்கு 169,825 இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற பொருளாதார நெருக்கடி நிலைமையின் கீழ் இந்த உத்தியோகத்தர் தொடர்பாக மனிதாபிபமான அடிப்படையில் அந்த இடர் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணிக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெறப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் பயன்படுத்தப்படுகின்ற CS-DRMS கடன் முகாமைத்துவ முறைமை, கடன் சேவைகளில் எதிர்பார்ப்புக்களை உள்ளடக்கிய பணிகளுக்காக உள்ளடக்கிய முறைமையாக | புதிய கடன் முகாமைத்துவ முறைமையொன்றை கொள்வனவு செய்வதில் உரிய தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி | நாளதுவரையாக்கப்பட்ட கணக்கீட்டு மற்றும் நிதி பாய்ச்சல் வசதிகளுடன் முறைமையை பேணிச் செல்லல் |

இருந்ததுடன், அதன் பிரகாரம் கடன் தொடர்பான தரவுகள் ITMIS இற்கு இனையவழி முறைமையில் தொடர்புபடுத்துதல் தொடர்பான உரிய நிறுவனத்துடன் கலந்துரையாடி கவனத்தில் கொள்ள வேண்டிய அளவு மேற்கொள்ளப்பட்ட போதும் தொழில்நுட்ப பிரச்சினைகளின் காரணமாக தற்போது CS-DRMS முறைமை ITMIS உடன் தொடர்புபடுத்துதல் கஷ்டமான பணியாக இருந்ததாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கடன் முகாமைத்துவ செயற்பாடுகளுடன் காசுப்பாய்ச்சல் முகாமைத்துவம் மற்றும் கடன் கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்யும் வசதிகளுடன் மற்றும்/ அல்லது CS-DRMS முறைமையில் ITMIS முறைமைக்கு தேவையான தரவுகளை மாற்றக்கூடிய வசதிகளுடன் ஆன கடன் முகாமைத்துவ முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு திணைக்களம் 2023 மே மாத இறுதி வரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

செய்தல், கடன் முகாமைத்துவம் தொடர்பான உரிய தரப்பினரின் தரவு தேவைகள் முறையாக கோருதல். (ITMIS ஐயும் உள்ளடக்கி) போன்ற விடயங்கள், சர்வதேச நிதியங்களுடன் கைச்சாத்திடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள கடன் மீள்கட்டமைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளும் வசதிகளை கவனத்தில் கொள்ளல் மற்றும் கடன் முகாமைத்துவம் தொடர்பாக எதிர்காலத் தேவைகள் தாக்கமளிகின்றமையால் அவ்வாறான இயலுமை மற்றும் நிலைபேறான தொழில்நுட்ப உதவியுடன் சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையொன்றை கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்காக திறைசேரி செயலாளரால் நியமிக்கப்பட்ட குழு கூட்டத்தில் மேற்கூறப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆய்வு செய்யப்படுகின்றதுடன் மிகுதி நடவடிக்கைகளை கலந்துரையாடி தற்போது தேவையான அறிக்கை தயாரிக்கப்படுகின்றது.

வேண்டும்.

(ஆ) 2022 ஆம் ஆண்டின் செயலாற்றல் திட்டத்தின் பிரகாரம் வருமான மதிப்பீடு மற்றும் உள்ளபடியான வருமானப் பெறுமதி பின்வருமாறு

| அபிவிருத்தி தரப்பினர் | வருமான மதிப்பீடு 2022 | உள்ளபடியான வருமான பெறுமதி 2022 | முரண்கள் | முரண்கள், வருமான மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| ------- | ------- | ------- | ------- | ------- |
| | ஐ.அ.டொ. மில்லியன் | ஐ.அ.டொ. மில்லியன் | ஐ.அ.டொ. மில்லியன் | சதவீதம் |
| உலக வங்கி | 482 | 456.2 | (25.8) | (5) |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 550 | 741.4 | 191.4 | 35 |
| சீனா | - | 101.3 | 101.3 | |
| யப்பான் | - | 75.7 | 75.7 | |
| கொரியா | - | 4.9 | 4.9 | |
| கிழக்காசிய நாடுகள் | 50 | 21.4 | (28.6) | (57) |
| தெற்காசிய நாடுகள் | 835 | 925.5 | 90.5 | 11 |
| ரஷ்யா, அவுஸ்ரேலியா மற்றும் மேற்குலக நாடுகள் | 150 | 76 | (74) | (49) |
| ஐக்கிய நாடுகளின் பிரதி நிதிகள் | 8 | 11.1 | 3.1 | 39 |
| | ----- | ----- | ----- | |
| மொத்தம் | 2,075 | 2,413.5 | 338.5 | |
| | ==== | ==== | ==== | |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2022 ஆம் ஆண்டின் வருமான மதிப்பீடு மொத்தப் பெறுமதி ஐ.அ.டொலர் 2,075 மில்லியனாக இருந்த போதிலும், உள்ளபடியான வருமான பெறுமதி ஐ.அ.டொலர் 2.413.5 மில்லியன் ஆனமையின் காரணமாக உள்ளபடியான தேறிய பெறமதி, வருமான மதிப்பீட்டினை விட ஐ.அ.டொலர் 338.5 மில்லியனால் அதாவது 16 சதவீத அளவினால் அதிகரித்திருந்தது.

2022 ஆம் ஆண்டில் வருமான மதிப்பீடு 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் சேவையிடல் செலுத்துதல் தொடர்பான இடைக்கால கொள்கை தொடர்பான அறிவித்தலுடன் எழுந்தருந்த புதிய நிலைமை பின்னர் மாற்றப்பட்டிருந்தது.

முறையான பிரகாரம் திட்டங்களுடன் வெளிநாட்டு கடன் நிதியீட்டம் செய்யப்படல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ii) | வருமான மதிப்பீட்டின் பிரகாரம் சீனா, யப்பான் மற்றும் கொரியாவில் இருந்து கடன் பெற்றுக்கொள்வதற்கு மதிப்பீடு செய்யப்படாத போதிலும், உள்ளபடியான கடன் பெறுவனவு முறையே ஐ.அ.டொலர் 101.3 மில்லியன், ஐ.அ.டொலர் 75.7 மில்லியன் மற்றும் ஐ.அ.டொலர் 4.9 மில்லியன் பெறுமதியை கொண்டிருந்தது. | இடைக்கால கொள்கை அறிவித்தலுடன் அநேகமான கடன் வழங்குகின்ற நாடுகள் மற்றும் நிறுவனங்களால் தற்போது அமுல்படுத்துகின்ற செயற்திட்டங்களுக்காக நிதிய வருமானத்தை பெற்றுக்கொள்ளுதல் கைவிடப்பட்டிருந்தது. சர்வதேச நிதியத்தில் இலங்கைக்கு முன்மொழியப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களை இணங்க கடன் மீள் கட்டமைக்கப்பட்ட பின்னர் மீண்டும் பொருத்தமான வகையில் செயற்திட்டங்களுக்காக வெளிநாட்டுக் கடன் வருமானத்தை ஆரம்பிக்க முடியுமென எதிர்பார்க்கப்பட்டிருந்தது. | முறையான பிரகாரம் திட்டங்களுடன் வெளிநாட்டு கடன் நிதியீட்டம் செய்யப்படல் வேண்டும். |
| (iii) | ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்தும், தெற்காசிய நாடுகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் முகவராண்மை நாடுகளில் இருந்தும் பெறப்பட்ட கடன்களின் உள்ளபடியான வருமானப் பெறுமதி வருமான மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது முறையே 35, 11 மற்றும் 39 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. | காணப்பட்ட டொலர் நெருக்கடிக்கு தீர்வாக ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி போன்ற அனேக தரப்பினருக்கு கடன் வழங்கும் நிறுவனங்களினால் இலங்கையின் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக வழங்கப்பட்ட கடன் வசதிகளில் ஒரு பகுதி மீண்டும் நோக்கமிடப்பட்ட (repurpose) அந்த நிதியத்தின் தேவைகளை இறக்குமதி செய்வதற்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதனால் மொத்த மதிப்பீட்டுடன் | முறையான பிரகாரம் திட்டங்களுடன் வெளிநாட்டு கடன் நிதியீட்டம் செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வேறுபாடுகள் இதன் மூலம் ஏற்பட்டிருந்தது. | |
| (iv) | உலக வங்கி, கிழக்காசிய நாடுகள் மற்றும் ரஷ்யா, அவுஸ்ரேலியா மற்றும் மேற்குலக நாடுகளில் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட கடன்கள் முறையே 5, 57 மற்றும் 49 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. | இந்தியாவை உள்ளடக்கிய சில நாடுகளினால் இலங்கையின் பொருளாதாரத்தில் காணப்பட்ட நெருக்கடி நிலைமையை சமநிலைப்படுத்தும் அவசரமான கடன் உதவி நிகழ்ச்சித்திட்டம் ஊடாக அத்தியவசிய இறக்குமதிகளை மேற்கொள்வதற்கு தேவையான நிதியை வழங்குவதற்கு இணங்கியிருந்தது. அந்த தீர்மானம் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டமையால் ஆரம்ப வருமான மதிப்பீட்டில் உள்ளபடியாக வருமான மாற்றங்கள் ஏற்படுவதற்கு காரணமாக இருந்தது. | முறையான பிரகாரம் திட்டங்களுடன் வெளிநாட்டு கடன் நிதியீட்டம் செய்யப்படல் வேண்டும். |
| (இ) | CS-DRMS கடன் முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகளின் அசாதாரண தன்மை மற்றும் இணங்காமை | | |
| (i) | இரண்டு கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக கூட்டுமொத்தமாக ரூபா 1,803,456 மறை கடன் மீதி அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் மற்றும் CS-DRMS 2000+Report 854-1 அறிக்கையில் அவதானிக்கப்பட்டது. | **கடன் இலக்கம் 2010117 மற்றும் 2010121**<br><br>முறையே 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளின் போது ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து பெறப்பட்ட கடன் தொகையாக இருந்ததுடன 2010 ஆம் ஆண்டின் போது அந்த கடன் ஐ.அ.டொலர் அந்திய செலாவணியில் விசேட பெறுவனவு உரித்து அந்நிய செலாவனியில் மாற்றப்பட்டிருந்தது. | அரசாங்க கடன் பெறல், கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவ்வாறு காணப்பட்ட மீதி ஐ.அ.டொலர் செலாவணியின் மூலம் 2022 ஆம் ஆண்டின் போது செலுத்தி முடிவுறுத்தும் போது ஏற்பட்ட அந்நிய செலாவணி நாணய மாற்று வேறுபாடு மறை பெறுமதியாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வேறுபாடு தற்போது சரி செய்யப்பட்டுள்ளது. | |
| (ii) | நான்கு கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக கூட்டுமொத்தமாக ரூபா 652,634,243 மறை கடனில் தேறியமை அரசின் நிதிக்கூற்றுக்களில் மற்றும் CS-DRMS 2000+Report 854-1 அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மேலும் இரண்டு கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக கூட்டுமொத்தமாக ரூபா 154,795,691 மறைகடன் மீதியில் தேறிய அரசாங்கத்தின் நிதிக்கூற்றுக்களில் மாத்திரம் அவதானிக்கப்பட்டது. | தேறிய மீள் கையளித்தல் (Refund) குறிப்பிடபட்டிருந்ததுடன் அந்த மறை பெறுமதியாக CS-DRMS தரவு முறைமையில் சரியாக குறிப்பிடப்பட்டள்ளது. இந்த மறை கடன் பெறுமதி CS-DRMS இல் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இந்த வருமான மூலதன மீள கையளித்தல் தொடர்பாக உரிய செயற்திட்ட பணிப்பாளரின் மற்றும்/ அல்லது செயற்திட்ட முகாமையாளர் மற்றும் திணைக்களத்திடமிருந்து விசாரணை செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. | அரசாங்க கடன் பெறல், கடன் சேவைகளை கணக்கீடு செய்தல் முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | 1994 ஏப்ரல் 20 திகதிய 30/94 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு உதவி தொடர்பாக சகல கொடுக்கல் வாங்கல்களும் பொது திறைசேரியின் வெளிநாட்டு வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும் தெரிவு பரிசோதனையின் பிரகாரம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க வெளிநாட்டு உதவி கணக்குகளை வைப்பதற்குரிய சுற்றறிக்கை மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் XI ஆம் அத்தியாயத்தின் நிதிப்பிரமாணம் 610 | பங்களிப்பாளர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் கிடைக்கின்ற வெளிநாட்டு மானியங்கள் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்துதல் தொடர்பாக தொடர்புபடுத்துதல் மற்றும் |

| | | |
|---|---|---|
| அவ்வாறு பொது திறைசேரியில் அறிவிக்காமல் ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களுக்காக 20 செயற்திட்டங்களிற்கு கூட்டுமொத்தமாக ரூபா 1,837,321,420 வெளிநாட்டு மானியம் நேரடியாக கிடைத்திருந்ததுடன் அந்த பெறுமதி நிதி ஏற்பாடு ஒதுக்கி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இன் மூலம் சகல அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களுக்கு வெளிநாட்டு உதவிக்கான சகல கலந்துரையாடல்களும் (negotiations) நடாத்த வேண்டியிருந்ததுடன் அந்த செயற்திட்டங்கள் அல்லது பணிகளுக்கு வெளிநாட்டு உதவி பெற்றுக்கொள்ளல் தொடர்பாக திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் விசாணை செய்யமுடியும் என பணிப்பாளர் நாயகத்தால் கூறப்பட்டிருந்தது. அது தவிர வெளிநாட்டு உதவி தொடர்பாக சகல கொடுக்கல் வாங்கல்களையும் மேற்கொள்ளல் அல்லது உரிய நியதிச்சட்ட நிறுவனங்களுக்கு கட்டளைகளை வழங்கும் அதிகாரம் இந்த திணைக்களத்திற்கு உரித்து இல்லாது இருந்ததுடன் அதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டுப்பாட்டு முறைமையொன்று அல்லது எந்தவொரு ஏற்பாடும் இந்த திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுங்கமைத்தலை வலுப்படுத்துதல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மூலம் 2017 யூன் 28 ஆந் திகதி விநியோகிக்கப்பட்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 இன் பிரகாரம் கொம்ரோலர் நாயகம் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்குரிய வாகன பதிவேடு மற்றும் திணைக்களத்தின் நிலையான சொத்துக்கள் பதிவேடு என்பவற்றை பரீட்சித்த போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) திணைக்களத்திற்குச் சொந்தமான 13 மோட்டார் வாகனங்கள் காணப்பட்ட போதும் நிலையான சொத்து பதிவேட்டில் பெறுமதி ரூபா 59,098,696 ஆன 11 மோட்டார் வாகனங்களுக்காக அந்த ஒவ்வொரு மோட்டார் வாகனத்தின் இலக்கத்தின் கீழ் காண்பிக்கப்படாமல் பொதுவில் ஒரு வாகன இலக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு சொந்தமான வாகனங்கள் நிலையான சொத்துப் பதிவேட்டுடன் உரிய பிரகாரம் இனங்காண முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டுக்குரிய சிகாஸ் கணனி முறைமையில் உள்ள இந்த வேறுபாடுகள் அரச கணக்குகள் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு குறிப்பிடுகின்றோம். | திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களை சரியாக இனங்காணல் மற்றும் பதிவேடுகளுக்கு கொண்டு வருதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | திணைக்களத்தின் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டு WPJV - 1448 மற்றும் WPKK-5481 என்ற இரண்டு மோட்டார் வாகனங்களின் இலக்கம் 01/2017 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொம்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2022 மே 30 ஆந் திகதி வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கைக்குரிய பதில் கடிதத்தில் இந்த இரண்டு வாகனங்களும் நிதி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்ட போதும், 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அமைச்சின் நிலையான சொத்துப் பதிவேட்டில் இந்த வாகனங்கள் இரண்டும் உள்ளடக்கபட்டிருக்கவில்லை. அவ்வாறே, கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனம் தொடர்பான விபரங்களிலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தால் பயன்படுத்தப்படுகின்ற WPJV -1448 மற்றும் WPKK-5481 என்ற வாகனங்கள் நிதியமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்கள் விநியோகிக்கும் கட்டளை மூலம் நிதி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. அதற்குரிய திணைக்களத்தின் நிலையான சொத்துப் பதிவேட்டில் அகற்றப்பட்டு தேவையான பதிவுகள் இட்டு சரிசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த வாகனங்கள் நிதி அமைச்சின் சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கபட்டதாக எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களை சரியாக இனங்காணல் மற்றும் பதிவேடுகளுக்கு கொண்டு வருதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் கொம்ரோலர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் செயற்பாட்டு குத்தகை முறைமையின் கீழ் பெறப்பட்ட ரூபா 15,900,000 பெறுமதியான இரண்டு வாகனங்களையும் சுதந்திர சொத்துக்கள் ஆக (Freehold Assets) உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும், அது திணைக்களத்தின் நிலையான சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | உரிய மோட்டார் வாகனங்கள் நிதிக் குத்தகை சொத்தின் கீழ் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்திற்கு சொந்தமான சொத்துக்களை சரியாக இனங்காணல் மற்றும் பதிவேடுகளுக்கு கொண்டு வருதல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்ற கூற்று (ACA-6) இன் பிரகாரம் ரூபா 11,045,533 ஏனைய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் 2022 ஆம் ஆண்டில் விற்று தீர்க்கப்பட்டிருந்தது. எனினும், இந்த விற்று தீர்த்தலுக்கான உரிய அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், இந்த அகற்றல்களில் உள்ளடக்கப்பட்ட உள்ளபடியான அகற்றுதல்கள் மற்றும் பிழைகளை சரி செய்தல் உரியவாறு வகைப்படுத்துவதற்கு போதியளவான கணக்காய்வு சான்றிதழ்கள் சமர்ப்பிக்கபடாதிருந்ததுடன் பிழைகளை சரி | இந்த விற்றுத் தீர்த்தல்களில் உள்ளபடியான பெறுமதி ரூபா 84,750 ஆக இருந்ததுடன் மிகுதி பெறுமதி விற்றுத் தீர்த்தல்களாக குறிப்பிடப்பட்ட போதிலும், அவை கணனி முறைமையில் ஏற்பட்ட வேறுபாடுகளுக்காக பிழைகள் சரிசெய்தல்கள் ஆகும். திணைக்களத்தின் பொருள்களை விற்றுத் தீர்க்கும் குழுவினை ஈடுபடுத்தி பிழைகளை சரிசெய்யும் போது பயன்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு ஏற்பாடுகள் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக மிகுதி நடவடிக்கை எடுக்கப்படுமென குறிப்பிடுகின்றோம். | சொத்துக்களை விற்றுத் தீர்த்தல், விற்றுத் தீர்ப்பதற்காக மற்றும் புத்தகங்களில் சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு முறையான கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

செய்தல்களுக்கான உள்ளக கட்டுப்பாடு ஏற்பாடுகள் போதியளவு இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. மனித வள முகாமைத்துவம்

### 4.1 நியமிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர்.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி திணைக்களத்தில் காணப்பட்ட 20 வெற்றிடங்களில் சிரேஷ்ட நிலையில் 06 வெற்றிடங்களும், இரண்டாம் நிலையில் 09 வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப நிலையில் 05 வெற்றிடங்களும் காணப்பட்டன. | சிரேஷ்ட நிலையில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய நிருவாக அதிகார தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களில் வெற்றிடங்கள் காணப்படுகின்ற போதும் தேவையான பிரகாரம் உத்தியோகத்தர்களை நியமித்துக் கொள்வதற்காக போதியளவான இடவசதிகள் காணப்படாமையின் அடிப்படையில் அந்த வெற்றிடங்கள் நிரப்பட முடியாமல் இருந்தது. எனினும், திணைக்களத்தின் தேவையின் பிரகாரம் இட வசதிகளை விரிவுபடுத்துவதற்காக நிதி அமைச்சுடன் கலந்துரையாடப்படுகின்றது. ஆரம்ப நிலையின் அலுவலக ஊழியர் சேவையின் வெற்றிடங்கள் யாவும் நிரப்பபட்ட போதும் சாரதி வெற்றிடங்கள் 04 இனை எதிர்காலத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தேவையான பதவியணியினர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் தேவையற்ற பதவியணியினரை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இருக்குமாயின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையை திருத்துதல் வேண்டும். |